# மேனிலை இரண்டாம் ஆண்டு

## புவியியல்

## மாதிரி வினாத்தாள் – 1

நேரம் : **2.30** மணி | மதிப்பெண் – 70

பகுதி I

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **15X1=15**

1. வட கோளார்த்தத்தில் துருவத்தைச் சுற்றி தொடர்ச்சியாகக் காணப்படும் சூழ்வாழிடம்.

அ. அயனமண்டலப் பகுதிகள் ஆ. மிதவெப்ப பகுதிகள்

இ. குளிர்பாலைவனம் ஈ. புல்வெளிகள்

2. உலகில் முதன் முதலில் உயிரினங்கள் தோன்றிய இடம்.

அ. காடு ஆ. கடல்

இ. மலை ஈ. புல்வெளி.

3. வளரும் நாடுகளில் மனிதத் திறனை முழுமையாக வெளிக் கொணர வாய்ப்பின்மைக்குக் காரணம்.

அ. மக்கள் தொகைக் குறைவு ஆ. அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறை

இ. வளங்களின் பற்றாக்குறை ஈ. மக்களின் உழைப்பின்மை.

4. உலகின் தற்போதைய மக்கட்தொகை வளர்ச்சி வீதம் சுமார்.

அ. 1.8 சதவீதம் ஆ. 1.3 சதவீதம்

இ. 1.7 சதவீதம் ஈ 1.6 சதவீதம்.

5. சந்தையை மையமாகக் கொண்ட குடியிருப்புக் கோட்பாடு.

அ. சந்தைக் கோட்பாடு ஆ. தொழிலக அமைவிடக் கோட்பாடு

இ. மைய இடக்கோட்பாடு ஈ. மக்கள்தொகை கோட்பாடு.

6. விளைநிலங்களுக்கு அருகிலேயே உற்பத்திப் பொருட்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள வேளாண்தொழில்.

அ. செறிந்த வேளாண்மை ஆ. தன்னிறைவு வேளாண்மை

இ. வணிக வேளாண்மை ஈ. பரந்த வேளாண்மை

7. இயற்கையிலிருந்து நேரடியாக வளங்களைப் பெறும் தொழில்.

அ. முதன்மை நிலைத் தொழில் ஆ. இரண்டாம் நிலைத் தொழில்கள்

இ. மூன்றாம் நிலைத் தொழில்கள் ஈ. நான்காம் நிலைத் தொழில்கள்.

8. ஒரு குறிப்பிட்ட தொழிலுக்குத் தேவையான பொருட்களை வேறு தொழில்களிடமிருந்து பெற்றுக் கொள்வது.

அ. இடுபொருள் பிணைப்பு ஆ. வெளிபடு பொருள் பிணைப்பு

இ. அத்தியாவசியப் பிணைப்பு ஈ. அத்தியாவசியமற்ற பிணைப்பு.

9. உலக நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம்.

அ. ஊரக வணிகம் ஆ. நேரிணை வணிகம்

இ. பன்னாட்டு வணிகம் ஈ. தல வணிகம்

10. ஒரு நாட்டில் உற்பத்தியாகின்ற பொருட்களின் தரமும், அளவும் எதை பொறுத்து அமைகின்றது.

அ. மக்கள்தொகை வளர்ச்சியை ஆ. தொழில் நுட்ப வளர்ச்சியை

இ. சமுதாய வளர்ச்சியை ஈ. கலாச்சார வளர்ச்சியை.

11. டி.ஜி.வி (T.G.V) இரயில் எந்த இரண்டு நகரங்களுக்கிடையே இயக்கப்படுகிறது ?

அ. லண்டன்–மான்செஸ்டர் ஆ. பாரிஸ்– லையான்ஸ்

இ. டெல்லி – மும்பை ஈ. நியுயார்க்–லாஸ் ஏஞ்சல்ஸ்

12. நீண்ட தொலைவுக்குக் குறைவான நேரத்தில் பயணம் செய்யப் பயன்படுவது.

அ. ஆகாய விமானங்கள் ஆ. ஹெலிகாப்டர்கள்

இ. கப்பல்கள் ஈ பேருந்துகள்

13. வான் வழிப்படங்கள் முதன் முதலில் எதிலிருந்து எடுக்கப்பட்டன ?

அ. விமானம் ஆ. பலூன்

இ. மலை ஈ. செயற்கைக்கோள்

14. பிரேசிலுக்கும் அர்ஜென்டினாவிற்குமிடையே வாதத்திற்கு உட்பட்ட ஆறு.

அ. லாபிளாட்டா ஆ. ஒரினாகோ

இ. மிஸிஸிபி மிசௌரி ஈ. ரைன்

15. NDVI என்பது.

அ. களப்பணி புள்ளிவிவரம் ஆ. இரண்டாம்நிலைப் புள்ளிவிவரம்.

இ. முதன்மைப் புள்ளிவிவரம் ஈ . செயற்கைக்கோள் புள்ளிவிவரம்

## பகுதி II

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. **6x2=12**

வினா எண் 20 க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

16. நெக்டான் என்றால் என்ன ?

17. மக்கள் தொகைப் பரவல் சீரற்று இருக்கக் காரணங்கள் யாவை ?

18. தலம் – வரையறு.

19. வலிமையற்ற பிணைப்பு என்றால் என்ன ?

20. நேரிணை வணிகம் என்றால் என்ன ?

21. போக்குவரத்து வலை என்றால் என்ன ?

22. வளர்ந்து வரும் நாடுகளில் நன்னீர் சார்பான இரண்டு சிக்கல்கள் யாவை ?

23. தொலை நுண்ணுர்வு மேடை என்பது யாது ?

24. மழைநீர் சேமிப்பு என்றால் என்ன ?

## பகுதி III

எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 25 கட்டாயம் விடையளிக்கப்பட வேண்டும். **6x3=18**

25. சதுப்பு நிலம் குறிப்பு வரைக.

26. வயதின் அடிப்படையில் மனிதப் பணித்திறன்பாட்டை எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம் ? அவை யாவை ?

27. தொழிலக வட்டம் என்றால் என்ன ? எடுத்துக் காட்டுகளுடன் கூறுக.

28. தென்கிழக்காசியக் குழுமத்தை விவரி.

29. கடலடி குடைவு வழி பற்றி எழுதுக.

30. சூரியனைச் சார்ந்த செயற்கைக்கோள் பற்றி எழுதுக.

31. நீர் அறத்தினை எவ்வழிகளில் கடைபிடிக்கலாம் ?

32. பாலைவனமாதலை சான்றுகளுடன் விவரி.

33. மாநிலங்களுக்கிடையேயான நதிகளை இணைத்தல் பற்றிக் கூறுக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **5x5=25**

34. அயன மண்டல சூழ்வாழிடத்தைப் பற்றி விவரி.

(அல்லது)

மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாட்டினை விளக்குக.

35. முன்னேறும் வயது பிரமிடு மற்றும் பின்னடையும் வயது பிரமிடு பற்றி விளக்குக.

(அல்லது)

நாட்டுப்புறக் குடியிருப்பின் வகைகளை விளக்குக.

36. தொழிலக அமைவிடக் காரணிகளை விளக்குக.

(அல்லது)

புவியியல் ரீதியாக வணிகத்தை வகைப்படுத்துக.

37. நீர் ஒரு மதிப்பு வாய்ந்த வளம் விளக்குக.

(அல்லது)

வெள்ளப் பெருக்கின் விளைவுகளை விவரி.

38. கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் உலகின் முக்கியப் பாலைவனங்களைக் குறித்துக் காட்டி குறிப்பு வரைக.

(அல்லது)

கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் உலகின் முக்கிய தொழிலக வட்டங்களை குறித்துக் காட்டி குறிப்பு வரைக.